## சுருக்கம்

பள்ளிக் கல்வி –அரசுத் தேர்வுகள் இயக்ககம் – செப்டம்பர் / அக்டோபர் 2017 மற்றும் மார்ச் 2018 நேரடித் தனித்தேர்வர்களுக்கு தேர்வு நடத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி (ஜிஇ1) துறை**

அரசாணை (நிலை) எண்.185 நாள் : 09.08.2017.

திருவள்ளுவர் ஆண்டு 2048
ஹேவிளம்பி வருடம், ஆடி– 24

**படிக்கப்பட்டவை :-**

1. அரசாணை (நிலை) எண்.2575 கல்வி துறை, நாள் 01.12.1980
2. அரசாணை (நிலை) எண்.1171 கல்வி (வி1) துறை, நாள் 27.11.1992.
3. அரசாணை (நிலை) எண்.100, கல்வி (வி1) துறை, நாள் 22.05.2017.
4. தங்கள் கடித ந.க.எண். 255472/எச்2/2017 நாள் 21.06.2017.

---

**ஆணை :–**

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மேல்நிலைப் பொதுத் தேர்வு 1980–ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில், எஸ்.எஸ்.எல்.சி பொதுத் தேர்வுகளில் அனைத்துப் பாடத் தேர்வுகளிலும் குறைந்தபட்சம் 35% மதிப்பெண்கள் பெற்று, 18 வயது நிரம்பியவர்கள் மார்ச்/ஏப்ரல் மற்றும் செப்டம்பர்/அக்டோபர் ஆகிய பருவங்களில் நடைபெறும் மேல்நிலைப் பொதுத் தேர்வுகளுக்கு, செய்முறைத் தேர்வுகள் அல்லாத கலைப் பாடங்களை தேர்வு செய்து நேரடித் தனித்தேர்வர்களாக தேர்வெழுதிட அனுமதி வழங்கப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், இடைநிலைக் கல்வியில் முழுமையாக தேர்ச்சி பெற்று, இரண்டாண்டு கால இடைவெளிக்குப் பின்னரே, மேல்நிலைப் பொதுத் தேர்வுகளுக்குத் தனித்தேர்வர்களாக விண்ணப்பித்துத் தேர்வெழுதிட இயலும் என்னும் புதிய நடைமுறைக்கு அரசு அனுமதி அளித்தது. மேலும், மேல்நிலைப் பொதுத் தேர்வெழுதும் தனித்தேர்வர்களது குறைந்தபட்ச வயது நிர்ணயம் $16^{1/2}$ வயது என குறைக்கப்பட்டது. அவ்விதிமுறைகளின்படி மேல்நிலை பொதுத் தேர்வுகளில் நேரடித் தனித்தேர்வர்களுக்கு செப்டம்பர்/அக்டோபர் மற்றும் மார்ச்/ஏப்ரல் மேல்நிலை பொதுத் தேர்விற்கு அனுமதி வழங்கப்பட்டு இதுநாள்வரை தேர்வுகள் நடத்தப்பட்டு வருகிறது.

3. இந்நிலையில், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2017-2018-ஆம் கல்வியாண்டு முதல் மேல்நிலைக் கல்வி முதலாமாண்டு பயிலும் மாணவர்களுக்கும் மாநில அளவில் பொதுத் தேர்வுகளை மார்ச் 2018 பருவம் முதல் நடத்துவதற்கு அரசால் ஆணையிடப்பட்டது.

4. இதனையடுத்து அரசுத் தேர்வுகள் இயக்குநர் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகள் நடத்துவது தொடர்பாக கீழ்க்காணும் நடைமுறைகளை பின்பற்ற கருத்து தெரிவித்துள்ளார்:-

i. செப்டம்பர்/அக்டோபர் 2015 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முந்தைய பருவங்களில், இடைநிலைக் கல்வியில் முழுமையாக தேர்ச்சி பெற்று இரண்டாண்டுக் கால இடைவெளியைப் பூர்த்தி செய்த தேர்வர்கள், செப்டம்பர்/அக்டோபர் 2017-ல் நடைபெறவுள்ள மேல்நிலை இரண்டாமாண்டு துணைத் தேர்வுகளை நேரடித் தனித்தேர்வர்களாக எழுதிட அனுமதி அளித்து தேர்வுகளை நடத்திடலாம்.

ii. இடைநிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்று மார்ச் 2018-ல் நடைபெறவுள்ள மேல்நிலைப் பொதுத் தேர்வுகளை (+2) நேரடித் தனித்தேர்வர்களாக எழுதிட, இரண்டாண்டுக்கால இடைவெளியை பூர்த்தி செய்திடும் பொருட்டு காத்திருக்கும் தேர்வர்களின் நலன் கருதி, தற்போதுள்ள பழைய விதிமுறைகளின்படி, மார்ச்/ஏப்ரல் 2016 மற்றும் ஜூன் / ஜூலை 2016 பருவம் மற்றும் அதற்கு முந்தைய பருவங்களில், இடைநிலைக் கல்வியில் முழுமையாக தேர்ச்சி பெற்று இரண்டாண்டுக்கால இடைவெளியை பூர்த்தி செய்த தேர்வர்கள், மார்ச் 2018-ல் நடைபெறவுள்ள மேல்நிலைக் கல்வி இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகளை நேரடித் தனித்தேர்வர்களாக எழுதிட அனுமதி அளித்து தேர்வுகளை நடத்திடலாம்.

iii. தற்போது நடைபெறவுள்ள மார்ச் 2018, மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகளை பழைய விதிமுறைகளின்படி ஒவ்வொரு பாடத்திற்கும் 200 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 1200 மதிப்பெண்களுக்கு தேர்வெழுதவுள்ள மாணாக்கர்கள் / நேரடித் தனித்தேர்வர்கள் அத்தேர்வுகளில் தோல்வியடையும் பட்சத்தில், அவ்வாறான தேர்வர்களின் நலன் கருதி அவர்களுக்கு இரு சிறப்பு வாய்ப்புகள் அளிக்கும் விதமாக, அடுத்துவரும் செப்டம்பர் / அக்டோபர் 2018 மற்றும் மார்ச்/ஏப்ரல் 2019-ல் நடைபெறவுள்ள மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகளின்போது அவர்கள் தோல்வியுற்ற பாடங்களில் மட்டும் தேர்வுகளை பழைய விதிமுறைகளின்படியே தேர்வெழுதிட அனுமதியளித்துத் தேர்வுகளை நடத்திட அரசின் அனுமதி வழங்கலாம்.

மேலும், ஒரு புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்படும் ஒவ்வொரு முறையும், தேர்வர்களது நலன் கருதி, ஏற்கனவே நடைமுறையில் உள்ள பழைய விதிகளின்படி இரு வாய்ப்புகள் வழங்கப்படுவது வழக்கமாகும் என்றும், எனவே, தற்போது மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மேற்காண் நடைமுறைகளின்படி செயலாற்றிட அனுமதி வழங்குமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டு, அதனை ஏற்று, ஒரு புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்படும் ஒவ்வொரு முறையும், தேர்வர்களது நலன் கருதி ஏற்கனவே நடைமுறையில் உள்ள பழைய விதிகளின்படி இரு வாய்ப்புகள் வழங்குவது போல், தற்போது மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலையில்; மேலே பத்தி 4 (i), (ii) and (iii)-ல் காணும் நடைமுறைகளின்படி செயலாற்றிட அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. உதயச்சந்திரன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6,

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

[signature] 9/8/17.
பிரிவு அலுவலர்

ந.க. எண்: 255472/ எச்.2/2017 , நாள்: 21. 06.2017

மேற்குறிப்பு
அரசாணை (நிலை) எண்: 185, பள்ளிக்கல்வி (அ.இ1) துறை, நாள்: 09.08.17

ன் நகல் தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் வழங்கப்படுகிறது.

பெறுநர்:

[signature] 10/8/17.
இணை இயக்குநர் செயலாளர் (மேல்நிலை)

1. அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள்,
3. அனைத்து அலுவலர்கள் (அலுவலகம்)
4. அனைத்து அரசு தேர்வுகள் மண்டல துணை இயக்குநர்கள்,
5. அனைத்து பிரிவுகள் (அலுவலகம்)

ரா.தே 10/8/17 10/8/17